1992 செப்டம்பர் 23]

அலுவலகம் இல்லை. ஆகவே, விவசாயப் பெருங்குடி மக்கள், ஏழையெளிய மக்கள் வாழ்கிற அந்தப் பகுதிக்கு இத்தகைய சார் பதிவாளர் அலுவலகம் ஒன்றை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்—இல்லை என்ற சொல்லே இல்லாத இந்த ஆட்சியில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லாமல் என் தொகுதியின் நன்மைக்காக சார் பதிவாளர் அலுவலகம் கொடுக்க அடுத்த ஆண்டிலேயாவது முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, நிதிப் பற்றாக்குறை என்கிற பெயரால் புரட்சித் தலைவியினுடைய கைகள் கட்டப்பட்டு இருந்தாலும், அதையும் மீறி அவர்கள் இவ்வாண்டு 5 சார் பதிவாளர் அலுவலகங்கள் அமைப்பதற்கு உத்தரவிட்டு இருக்கிறார்கள். அப்படி 5 அலுவலகங்கள் அமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறபோது, முன்னுரிமை கொடுக்கிறபோது, எங்கே இருக்கிற மக்கள் அதிகமாக சங்கடப்படுகிறார்களோ, அதை உத்தேசித்து, அதனுடைய முக்கியத்துவத்தைப் பார்த்து, அதற்கேற்றவாறு அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது சர்க்கார் சாமக்குளத்தில் அலுவலகம் அமைக்க வேண்டும் என்றால், அங்கே இருக்கிற கிராம மக்கள் இன்றைக்கு பெரியநாய்க்கன்பாளையத்திற்குச் சென்று, பதிவு செய்கிறார்கள். ஆனால், அது அவர்களுக்கு சங்கடமாக இருக்கும் என்றால், அவினாசி அருகாமையில் இருக்கிறது, அதுவும் சங்கடமாக இருந்தால், கோயம்புத்தூர் இருக்கிறது, அன்னூர் இருக்கிறது. அதைப் பற்றியும் அரசு பரிசீலனை செய்து, எது மக்களுக்கு சௌகரியமோ, அதைச் செய்வதற்கு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்-45, திரு. இரா. தங்கராசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

ஆண்டிமடத்தில் அரசு கலைக் கல்லூரி.

45—

*9829—திரு. இரா. தங்கராசு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டிமடத்தில் அரசு கலைக்கல்லூரி கொண்டு வரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே என்து தந்தை இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்தபோது, அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அரியலூரில் ஒரு தொழில் பயிற்சிக் கல்லூரியை அமைத்துக் கொடுத்தார்கள். ஆகையினால், இன்றைக்குத் தமிழகத்திலே நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருக்கிற, தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவியார் அவர்களுடைய ஆட்சியிலே, ஏழைகள் வாழ்கின்ற பகுதியாக இருக்கிற ஆண்டிமடம் தொகுதியிலே ஒரு அரசுக் கலைக் கல்லூரியை அமைத்துத் தர ஆவன செய்ய, மீண்டும் அமைச்சர் அவர்களை இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பதில் ஆண்டிமடத்திற்கு மட்டுமல்ல, எல்லாத் தொகுதிகளுக்கும் பொதுவாகத் தான் நான் சொல்கிறேன். இனிமேற்கொண்டு அரசு தன்னுடைய பணத்தைத் தொடக்கக் கல்விக்குத் தான் அதிகம் செலவு செய்யுமே தவிர, கலைக் கல்லூரிக்குச் செலவு செய்யாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா. எண். 46, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

46—

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு உ.வே. சாமிநாதய்யர் பெயர் வைத்தல்.

*10385—திரு. கே. ஆர். முருகானந்தம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் பெயர் வைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?